L101

புதுச்சேரி அரசு
புதுச்சேரி மாநில வக்பு வாரியம்
எண்:1, 3-வது மாடி, ஏனம் வெங்கடாசலம் பிள்ளை வீதி,
புதுச்சேரி - 605001
தொலைபேசி: 0413-2343268 பேக்ஸ்: 0413-2222344

எண்:3/வ.வா/வ.அ/2020(16) தேதி:08.04.2020

## அறிவிப்பு

பொருள்: புதுச்சேரி வக்பு வாரியம் - கோவிட் 19 - புதுச்சேரி மாநிலத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் - ஷபே-பராஅத் தினமான 09.04.2020 அன்று பள்ளிவாசல்கள், இஸ்லாமிய அடக்கஸ்தலம் மற்றும் தர்காக்களுக்கு செல்ல தடை - சம்பந்தமாக.

பார்வை: புது டெல்லி, மத்திய வக்பு கழகம் அறிவுரை குறிப்பாணை அறிவிப்பு எண்:55(1)/2017-CWC(C&S) நாள் 07.04.2020.

-----

பார்வையில் காணும் மத்திய வக்பு கழகத்தின் அறிவிப்பு இத்துடன் இணைக்கப்படுகிறது.

மேற்காண் அறிவிப்பில் மாண்புமிகு பாரத பிரதமரின் ஆணையின்படி நாடு முழுவதும் 21 நாட்கள் ஊரடங்கு 14.04.2020 வரை அமலில் உள்ள நிலையில் அனைத்து வழிபாட்டு தலங்களில் மக்கள் கூடுவது தடை செய்யப்பட்டு அவரவர்கள் இல்லங்களிலேயே வழிபாடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 09.04.2020 ஷபே-பராஅத் புனித இரவில் இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகைக்காக பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் அடக்கஸ்தலங்களில் கூடுவதை தவிர்க்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே அனைத்து வக்பு நிர்வாகத்தினரும் மத்திய வக்பு கழகத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் விதமாக 09.04.2020 ஷபே-பராஅத் அன்று பள்ளிவாசல்கள் / தர்காக்கள் / அடக்கஸ்தலங்களில் மக்கள் கூடுவதை கண்டிப்பாக தவிர்க்க மத்திய வக்பு கழகம் தடை செய்துள்ளதை தவறாமல் கடைப்பிடிக்க அறிவுறுத்தப்படுகிறது.

PUDUCHERRY STATE WAQF BOARD

8/4/2020

(அ. முஹம்மது இஸ்மாயில்)
வக்பு அதிகாரி

பெறுநர்:
அனைத்து வக்பு நிர்வாகத்தினர் / முத்தவல்லிகள்
புதுச்சேரி / காரைக்கால்.

Scanned with CamScanner